# தமிழ்நாடு அரசு
## நெடுஞ்சாலைத்துறை
## திருநெல்வேலி வட்டம்
## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
## ஒப்பந்த அறிவிப்பு எண் 5/2004–05/வ1, நாள் 27.11.2004

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பாகவும் கண்காணிப்புப்பொறியாளர் (நெ) திருநெல்வேலி அவர்களால் கீழே குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கு கீழ்க்கண்டவாறு மூடி முத்திரையிடப்பட்ட (இரு உறைகள் முறை) முன் தகுதி காணலுக்கான ஆவணங்கள் மற்றும் முன்வைப்புத்தொகை தனி உறையிட்டு மற்றும் வேலைகளுக்கான சதவீத ஒப்பந்தப்புள்ளி தனி உறையிட்டு இரண்டையும் உள்ளடக்கி மேலுறையிட்டது (இரு உறைகள் முறை) ரிசர்வ் லைன் ரோடு, பாளையங்கோட்டை, திருநெல்வேலி–2ல் உள்ள அவரது அலுவலகத்தில் 23.12.2004 அன்று பிற்பகல் 3.00 மணி வரை (அலுவலக கடிகாரப்படி) வரவேற்கப்படுகிறது..

மேற்கண்ட ஒப்பந்த அழைப்பில் முன் தகுதி காணலுக்கான படிவத்தில் சொல்லப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளுக்கு ஏற்புடைய ஒப்பந்தக்காரர்கள் மற்றும் இத்துறையில் மாநில அளவில் முதல் வகுப்பு ரூ.25.00 லட்சத்திற்கு மேல் பண வரம்புடன் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்கள் மட்டும் போட்டிக்கு தகுதியுடையவர்கள் ஆவார்கள்.

| வ. எண் | வேலையின் பெயர் | உத்தேச மதிப்பிட்டத் தொகை (ரூபாய் லட்சத்தில்) | முன்வைப்புத் தொகை (ரூபாய்) | ஒப்பந்த நமூனா விலை (ரூபாய்) | ஒப்பந்த படிவம் கிடைக்குமிடம் |
|---|---|---|---|---|---|
| 1 | <u>**முதல் அழைப்பு**</u><br><u>**மத்திய சாலை நிதி திட்டம் 2004–05**</u><br><u>**திருநெல்வேலி (நெ) கோட்டம்**</u><br>பாளையங்கோட்டை–குறுக்குச்சாலை–குளத்தூர்–விளாத்திகுளம்–நாகலாபுரம்–பந்தல்குடி–அருப்புக்கோட்டை சாலை கிமீ.2/0–7/0 முடிய அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல் (மாநிலச்சாலை) | 110.00 | 65,000 | 5,000 + 630 | கோட்டப்பொறியாளர் (நெடுஞ்சாலை) ரிசர்வ் லைன் ரோடு பாளையங்கோட்டை |
| 2 | <u>**தூத்துக்குடி நெ) கோட்டம்**</u><br>பரமன்குறிச்சி–உடன்குடி சாலை கிமீ. 0/0–6/8 முடிய அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல் (மாவட்ட முக்கிய சாலை) | 140.00 | 80,000 | 5,000 + 630 | கோட்ப்பொறியாளர் (நெடுஞ்சாலை) எட்டையாபுரம் சாலை தூத்துக்குடி |
| 3 | <u>**நாகர்கோவில் (நெ) கோட்டம்**</u><br>ஆரல்வாய்மொழி–நெடுமங்காடு சாலையில் கிமீ. 13/0–16/0 முடிய உறுதிப்படுத்துதலும் கிமீ. 16/0–19/4 முடிய அகலப்படுத்தி உறுதிப்படுத்துதலும் (மாநிலச் சாலை) | 104.00 | 62,000 | 5,000 + 630 | கோட்டப்பொறியாளர் நெடுஞ்சாலை பொபது வளாகம் நாகர்கோவில் |

ஷெடியூல்டு வங்கியிலிருந்து வழங்கப்பட்ட வைப்புத்தொகை ரசீது, டிமாண்ட் டிராப்ட் மற்றும் ரத்து செய்ய முடியாத வங்கி உத்திரவாதம் மற்றும் அஞ்சலக சேமிப்பு பத்திரங்கள் முதிர்வு பெறாத இந்திரவிகாஸ் பத்திரங்கள் முதலியன சம்பந்தப்பட்ட கோட்டப்பொறியாளர் (நெ) பதவி பெயரில் ஈடு செய்யப்பட்ட முன்வைப்புத்தொகைகள் ஏற்றுக்கொள்ளப்படும். சம்பந்தப்பட்ட கோட்டப்பொறியாளர் (நெ) பதவி பெயரில் ஈடு செய்யப்படாத முன் வைப்புத்தொகைகள் ஏற்றுக்கொள்ளப்படாததுடன் ஒப்பந்தப்புள்ளியும் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

முன் தகுதி காணலுக்கான ஆவணம் மற்றும் பட்டியலிடப்பட்ட சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் தபால் மூலமாகவோ கூரியர் மூலமாகவோ தனி நபர் மூலமாகவோ அல்லது பதிவு அஞ்சல் மூலமாகவோ கண்காணிப்புப்பொறியாளர் (நெ) திருநெல்வேலி அவர்களின் அலுவலகத்திற்கு ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் பெறப்படுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட காலமான **23.12.2004** அன்று பிற்பகல் **3.00** மணிக்குள் கிடைக்கும்படியாக அனுப்பப்படவேண்டும். அவ்வாறு உரிய நேரத்தில் பெறப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படாமலேயே திருப்பி கொடுத்துவிடப்படும். கூரியர் அஞ்சல் தனி நபர் ஆகியோர் மூலம் ஏற்படும் காலதாமதத்திற்கு இத்துறை எந்த வகையிலும் பொறுப்பு ஏற்காது.

மேற்கண்ட வேலைகளுக்கு முன் தகுதி காணலுக்கான படிவம் மற்றும் சதவீத ஒப்பந்தப்புள்ளி படிவம் சம்பந்தப்பட்ட கோட்டப்பொறியாளர் (நெ) அவர்களது அலுவலகத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்குத் தலைப்பின் கீழ் சம்பந்தப்பட்ட கோட்டப்பொறியாளர் (நெ) அவர்களது எல்லைக்குட்பட்ட அரசு கருவூலத்தில் கட்டணம் செலுத்தி (திருப்பித்தரப்படமாட்டாது). செல்லுச்சீட்டுடன் அலுவலக வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் **20.12.2004** வரை எழுத்து மூலம் நேரடியாகவோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட அவரது ஏஜெண்ட் மூலமாகவோ விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளலாம்.

## தொகை செலுத்தவேண்டிய கணக்குத் தலைப்பு

| | |
|---|---|
| ஒப்பந்தப்புள்ளி நமூனா விலை<br>ரூ.5000/– வ. எண் 1 .2 மற்று ம் 3 | 8658 Highways suspense account III Other receipts to the credit of the Divisional Engineer (H) concerned |
| விற்பனை வரி மற்றும் சர்சார்ஜ்<br>ரூ.630/– வ. எண் 1 ,2 மற்று ம் 3 | 0040 Sales Tax |

மைய சுடுகலவை இயந்திரம் மற்று பேவர் பினிஷர் சொந்தமாக வைத்திருந்து இத்துறையில் முதல் வகுப்பு பதிவு பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு மட்டுமே ஒப்பந்தப்புள்ளி படிவம் வழங்கப்படும். மைய சுடுகலவை இயந்திரம் மற்றும் பேவர் பினிஷர் ஆகிய இயந்திரங்கள்/உபகரணங்கள் அனைத்தும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு முன்பே ஒப்பந்தக்காரர்களிடம் இருத்தல்வேண்டும். மைய சுடுகலவை இயந்திரம் மற்றும் பேவர் பினிஷர் வாங்குவதற்கான ரசீது மற்றும் பத்திரங்கள் ஆகியன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

பூர்த்தி செய்யப்பட்ட முன் தகுதி காணலுக்கான மற்றும் சதவீத விலைகளுக்கான ஒப்பந்தப்புள்ளி கண்காணிப்புப்பொறியாளர் (நெ) ரிசர்வ் லைன் ரோடு, பாளையங்கோட்டை, திருநெல்வேலி–2 என்ற முகவரியில் உள்ள அவரது அலுவலகத்தில் **23.12.2004** அன்று பிற்பகல் **3.00** மணி வரை (அலுவல கடிகாரப்படி) பெற்றுக்கெள்ளப்படும். அதில் முன் தகுதி காணலுக்கான உறைகள் மட்டுமே **23.12.2004** அன்று பிற்பகல் **3.15** மணி அளவில் வருகை தந்துள்ள ஒப்பந்தக்காரர்களின் முன்னிலையில் திறக்கப்படும். இதில் முன் தகுதி காணலுக்கான ஆவணங்கள் மட்டும் பரிசீலிக்கப்பட்டு தகுதியுள்ள ஒப்பந்தக்காரர்கள் தேர்வு செய்யப்பட்ட பின்னர் அறிவிப்பு கொடுக்கப்படும். மற்றவர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படாமல் திருப்பி கொடுத்துவிடப்படும்.

கண்காணிப்புப்பொறியாளர் (நெ) திருநெல்வேலி அவர்களுக்கு எந்த ஒப்பந்தப்புள்ளியையும் அல்லது அனைத்தையும் எவ்வித காரணமும் கூறாமல் நிராகரிக்க முழு அதிகாரம் உணடு.

இது சம்பந்தமாக மேற்கொண்டு விவரங்கள் ஏதும் தேவையிருப்பின் கண்காணிப்புப்பொறியாளர் (நெ) திருநெல்வேலி அவர்களிடமிருந்து நேரடியாக தெரிந்துகொள்ளலாம்.

விற்பனை வரிக்காக வணிக வரித்துறையிடம் பதிவு செய்த பதிவு எண் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடவேண்டும். விற்பனை வரி செலுத்திய நிலுவையில்லா சான்றிதழை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்படவேண்டும்.

# முன்தகுதி காணலுக்கான குறைந்த பட்ச தகுதிகள்

1. ஒப்பந்தக்காரர்கள் அதே பெயர் அதே பாணியில் முதன்மை ஒப்பந்தக்காரராக (Same name and style) கடந்த ஐந்தாண்டுகளில் வருடாந்திர வேலை செய்த சராசரி அளவு (Annual turn over) ஒப்பந்த மதிப்பில் 40% சாதித்திருக்கவேண்டும் (முன்னேற்றத்திலுள்ள பணியில் பட்டியலிடுதல் முடிக்கப்பட்ட பணிகள்) .
2. ஒப்பந்தக்காரர்கள் அதே பெயரிலும் அதே பாணியிலும் (Same name and style) முதன்மை ஒப்பந்தக்காரராக கடந்த ஐந்து வருடங்களில் ஏதேனும் ஒரு பணியாவது தற்போது ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் வேலையின் மதிப்பில் 40% அளவிற்கு செய்து முடித்திருக்கவேண்டும்.
3. கடந்த ஐந்து வருடங்களில் ஏதாவது ஒரு பணியில் தற்போது ஒப்பந்தப்புள்ளி கோரும் பணியின் ஒத்த தன்மையுடைய முக்கிய இனங்களில் (Major items) 40% பணிகள் முடித்திருக்கவேண்டும்.
4. ஒப்பந்தக்காரர்கள் இவ்வேலையை செய்து முடிப்பதற்கு போதுமான கருவி தளவாடங்கள் வைத்திருக்கணேடும்.
5. ஒப்பந்தக்காரர்கள் இவ்வேலையை செயல்படுத்தும் வகையில் அதே பணியின் மதிப்பிற்கு குறையாமல் பொருள் திறன் ( Bid capacity ) கொண்டவராக இருத்தல் வேண்டும்.

## குறிப்பு

- ஒப்பந்தப்புள்ளி நமூனாக்களின் விலைக்காக ரொக்கம் அல்லது காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. அவைகளின் விலைக்கான தொகையை சம்பந்தப்பட்ட கோட்ட எல்லைக்குட்பட்ட அரசு கருவூலத்தில் செலுத்திய செலுத்துச்சீட்டை இணைத்து ஒபந்தப்புள்ளி நமூனாக்களை பெற்றுக்கொள்ளவும்.
- மேற்கூறியுள்ள வேலைகளுக்கு தகுதி ஆவணங்கள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை பெற மேற்கண்ட தகுதிகள் மற்றும் இத்துறையில் பதிவுபெற்ற மாநில அளவிலான முதல் வகுப்பு ஒப்பந்தக்காரர்களுக்கு மட்டுமே தகுதி உண்டு.
- இணை முயற்சியுடன் ( Joint venture ) கூடிய ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளிகள் நிச்சயமாக ஏற்றுக்கொள்ளாமல் நிராகரிக்கப்படும்.

கண்காணிப்புப்பொறியாளர் (நெ),
திருநெல்வேலி–2.